**17.04.2025**

**O.S. No. 49/2011**

**வா.சா.1 : அய்யாவு**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

16) நான் தாக்கல் செய்த ஒப்பந்த பத்திரத்தில் உள்ள சொத்துக்கள் என் மாமனாருக்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அவை டிகார்டு பட்டா படியும், சுயாராஜித கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டது என்றால் சரிதான். என் மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தான் சரஸ்வதிக்கு தான செட்டில் மெண்ட் எழுதப்பட்டதுள்ளது என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதிக்கு தானம் மூலம் வந்த சொத்துக்களை தான் அருள்மணிக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான்.

17) 3 ம் பிரதிவாதி அருள் மணி கிரையம் பெற்ற 5 வது ஆவணமாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அருள்மணியை தாவாவில் 3 ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதிக்கு எதிராக நான் எந்தவித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் கேட்கவில்லை. நான் 3 ம் பிரதிவாதிக்கு எதிராக நான் எந்தவித பரிகாரமும் கேட்காத நிலையில் அவர் இந்த வழக்கிற்கு அவசியமற்ற நபர் என்றால் சரியல்ல.

18) இந்த வழக்கில் என்னுடைய முதல் விசாரணையில் என்னை சாட்சியாக விசாரித்து பின்னிட்டு 15.03.2018 அன்று இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். உடல் நிலை சரியில்லாமல் போவிட்டதால் நான் வரவில்லை. 1-1/2 வருடத்திற்கு பின்னிட்டு தான் மனு போட்டு வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துக்களின் வருவாய் துறை ஆவணங்கள் சுவாதீனம் அருள் மணி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அவர் பெயரில் சுவாதீனம் உள்ளதற்கு நான் வருவாய் துறை மீது எவ்வித

நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை.

19) வழக்கு போடுவதற்கு முன்பே அவர்கள் பெயரில் ஆணங்கள் மாறிவிட்டது என்றும் அது தெரிந்ததே நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள சொத்துகளில் என் மாமியார்பெயரில் உள்ள சொத்துக்களை நானும், என் மாமனார் பெயரில் உள்ள சொத்தை என் மனைவியின் சகோதரியின் மீது கிரைய செய்து கொண்டோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் கிரையம் செய்துவிட்டதால் நான் அவ்வாறு கிரையம் செய்ய சூழ்நிலை ஏற்பட்டது.

20) நான் சொல்வது தவறு என்றும், 19.05.2011 ம் தேதி அன்று என் மாமனார் பெயரில் உள்ள சொத்தை என் மனைவியின் சகோதரியின் பெயரிலும்,மறுநாளே என் மாமியார் பெயரில் உள்ள சொத்ததை என் பெயருக்கும் நான் கிரையம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா-ஆ.1 ஆவணம் என்னாலும், எனக்கு வேண்டியவர்களாலும் கிரைய பத்திரங்களுக்கு 3 நாட்கள் முன் தேதியிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

21) வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிட்ட படி 10 ஏக்கர் 88 செண்ட்-யை ரூ.9,40,000/- விலை பேச வேண்டிய அவசியம் இல்லை என்றும், அந்த ஆவணத்தில் குறிப்பிட்ட ரூ- 1,40,000/- அந்த நபர்களால் பெறப்படவில்லை என்றால் சரில்ல. அதே போல் வா.சா.ஆ.1 உள்ள ராமசாமியின் கையெழுத்தும் அவருடையது அல்ல என்றும், அதில் உள்ள அலமேலுவின் கைரேகையும் அலமேலுடையது அல்ல என்றால் சரியல்ல.

22) இந்த வழக்கில் நான் கூடுதல் வாக்குமூலத்தை 18.12.2015 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் பிரதிவாதிகள் மறுத்துள்ள கையொப்பம்

மற்றும் கைரேகையை நான் நிரூபணம் செய்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நாளது வரை நான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1ல் உள்ள என் மாமனாரின் கையெழுத்தும், சரஸ்வதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் உள்ள மாமனாரின் கையெழுத்தும் வெவ்வேறாக உள்ளது என்றால் அந்த இரண்டும் ஒரே கையெழுத்து தான்.

23) கிரைய ஒப்பந்த பத்திரத்தில் ராமசாமியின் கைரேகை இல்லை. நான் சொல்வது தவறு என்றும் இரண்டும் வெவ்வேறான கையெழுத்துக்கள் என்றால் சரியல்ல. என் மாமியார் எனக்கு எழுதி வைத்த கிரைய பத்திரத்தில் உள்ள அலமேலுவின் கைரேகையும், வா.சா.ஆ.1 உள்ள அலமேலுவின் கைரேகையும் வெவ்வேறாக உள்ளது என்றால் அந்த இரண்டும் ஒரே கைரேகை தான். நான் ஒப்படைத்த கிரைய ஆவணத்ததை 03.01.2013 அன்று நான் மனு போட்டு வாங்கி சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.

24) என் மாமியார் மாமனார் பெயரில் உள்ள சொத்துக்கள் எங்களிடம் இல்லை என்றும், அது 3ம் நபரின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். என் மாமனார் பெயரில் உள்ள சொத்துக்களை 2ம் பிரதிவாதிக்கு கொடுத்த தான செட்டில் மெண்ட் பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களை நான் அபகரிக்கவேண்டி 2, 3 பிரதிவாதிகளிடம் இருந்த துர்லாபம் அடையவேண்டியும் நான் வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்து இந்த வழக்கை அவர்களுக்கு எதிராக பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

25) நான் ஒப்பந்தம் போட்ட காலத்தில் சொத்தின் ஏக்கர் மதிப்பு சுமார் எவ்வளவு போகும் என்றால் ரூ. 4 இலட்சம் போகும். என்னுடைய சாட்சித்தின் படி 10 ஏக்கர் சொத்தை ரூ. 9,40,000/- விற்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரம் பொய்யானது என்றும், அதனால்

செல்லாத பொய்யான ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்தது நிலைக்கதக்கது அல்ல என்றும், தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.04.17 18:47:53 +0530

**Subordinate Judge, Attur.**